1980 பிப்ரவரி 6]

புலவர் கா. கோவிந்தன்: தலைவரவர்களே, அம்பத்தூர் நகரியத்தைப் பற்றிய கேள்வி இது. ஆனால் இன்றைக்கு தமிழ் நாட்டிலே எந்த ஊராட்சியில் பார்த்தாலும் தெரு விளக்குகள் எரியவில்லை. இப்போது ஊராட்சி மன்றங்களால் தெரு விளக்குகளுக்கு பல்புகள் வாங்கிக் கொடுப்பது நிறுத்தப்பட்டு, மறுபடியும் மின்சார வாரியமே தெருவிளக்குகளைப் பராமரிக்கின்ற முறை அமல்படுத்தப்படுவதாக அறிகிறோம். மின்சார வாரியத்திலிருந்து ஊராட்சி மன்றங்களுக்குத் தெருவிளக்குகள் பராமரிக்கும் முறை மாற்றப்பட்டபோது எல்லா விளக்குகளுக்கும் பல்பு போட்டுத்தான் மாற்றினோம்; அதைப்போல ஊராட்சி மன்றங்களிலிருந்து மின்சார வாரியத்திற்கு மாற்றும்போதும் எல்லா பல்புகளையும் போட்டுக் கொடுத்தால்தான் ஏற்றுக்கொள்வோம் என்று சொல்கிறார்கள். இந்தத் தகராறினால் எந்த ஊராட்சி மன்றத்திலும் தெருவிளக்குகள் எரியவில்லை. எல்லா தெரு விளக்குகளையும் எரிய வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. புலவர் கோவிந்தன் அவர்கள் இந்த அவையிலே பேரவைத் தலைவராக இருந்தவர். ஆகவே இந்த மாதிரி பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமானால் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரலாமே தவிர இப்படி அம்பத்தூர் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் பொதுப்படையான தகவல்களைப் பற்றிப் பேசக் கூடாது. ஆகவே இதற்குரிய தகவல்களைத் தரவேண்டிய அவசியம் இல்லை.

திருச்சி நகரிலுள்ள சாலைகள்.

*வினா எண் 69—திரு. கே. சௌந்தரராஜன்— மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி நகரில் சாலைகள் நீண்டகாலமாக பழுது பார்க்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) பாதாள சாக்கடை வேலைகள் நடைபெற்று வருவதால் சில சாலைகள் பழுது பார்க்கப்படாமல் உள்ளன.

(ஆ) சாலைகளைப் புதுப்பிக்க திருச்சி நகராட்சி தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.